சுருக்கம்

வேளாண்மை – வேளாண்மைப் பொறியியல் துறை – சிறுபாசனம் – செம்பாளூர் கிராம சமுதாய கிணறு அமைத்தது – கடன் தொகை நிலுவை ரூ.11,905/–ஐ தள்ளுபடி செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மை (வே.பொ.1) துறை

அரசு ஆணை (நிலை) எண்.62 நாள் 09.03.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
மாசித் திங்கள் 25 ஆம் நாள்

படிக்க:

1. அரசு ஆணை (நிலை) எண்.307, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 28.5.1992.
2. தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்), கடித எண்.ட்டி3/68278/2017, நாள் 25.10.2017 மற்றும் 4.1.2018.

******

ஆணை:

பார்வையிரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) தனது கருத்துருவில், அரசாணை (நிலை) எண்.3028, வேளாண்மை துறை, நாள் 04.10.1969–ன்படி பட்டுக்கோட்டை வட்டம், செம்பாளூர் கிராமத்தில் சமுதாய கிணறு அமைக்கப்பட்டது என்றும் செம்பாளூர் கிராமத்தில் சமுதாய கிணறு அமைத்தது தொடர்பான கடன் தொகை, பட்டுக்கோட்டை முன்னாள் உதவி செயற் பொறியாளர் (வே.பொ.), விரைவுத் திட்டம் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது என்றும், இக்கடன் தொகை கடந்த 20 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில் தொகை வசூலிக்க வாய்ப்பு ஏதும் இல்லை என்றும், இந்நிலையில், செம்பாளூர் இறவை நீர்பாசன கூட்டுறவு சங்கம் கடந்த 09.10.1991–ல் கலைக்கப்பட்டு விட்டதாக பட்டுக்கோட்டை கூட்டுறவு துறை, துணைப்பதிவாளர் அவர்களின் கடிதம் எண்.பவெ.99/ 2005/தவா, நாள் 17.08.2005–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. இச்சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள அரசு கடன் நிலுவைத் தொகை ரூ.11,905/ தற்போது வசூலிக்கப்படாமல் இருந்து வருகின்றது. செம்பாளூர் சமுதாய குழாய் கிணற்றினை ஆய்வு செய்ததில் அக்கிணறு பயனற்று போய் பல ஆண்டுகள் ஆகியதாக தெரிய வருகின்றது, எனவே, இந்நிலையில் நிலுவைத் தொகை வசூல் செய்யப்பட இயலாத நிலையில் உள்ளது எனத் தெரிவித்துள்ளார். செம்பாளூர் இறவை நீர்பாசன கூட்டுறவு சங்கத்திடமிருந்து சமுதாய கிணறு அமைப்பதற்காக இதுவரை வசூலிக்கப்பட்டுள்ள தொகை விவரம்:–

| | |
|---|---|
| மொத்த செலவுத் தொகை | ரூ.23,861/– |
| வசூல் தொகை | ரூ.11,956/– |
| மீத நிலுவை தொகை | ரூ.11,905/– |

(கு.பி.பா.)

2. மேலும், அரசு ஆணை எண்.307, வேளாண்மை (வே.பொ.1) துறை, நாள் 28.05.1992–ன் படி தணிக்கை குழுவினரால் குறிப்பிடப்பட்ட முறையற்ற செலவினம் (Irregular expenditure) முழுமையாக வசூல் செய்யப்படாத தொகை ஆகியவற்றை தள்ளுபடி செய்ய தலைமைப் பொறியாளர் (வே.பொ.) அவர்களுக்கு 1 (ஒரு) தடவைக்கு ரூ.1000/– மட்டுமே அதிகாரம் உள்ளது என்றும், செம்பாளூர் இறவை நீர்ப்பாசன கூட்டுறவு சங்கம் நீண்ட நாட்களுக்கு முன்பே கலைக்கப்பட்டுவிட்டதாலும், மீதமுள்ள நிலுவைத் தொகை ரூ.11,905/–ஐ யாரிடமும் வசூல் செய்ய இயலாத நிலையில் நிலுவைத் தொகை ரூ.11,905/–ஐ தள்ளுபடி செய்ய தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) கோரியுள்ளார்.

3. தலைமைப் பொறியாளர் (வே.பொ.) அவர்களின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்க முடிவு செய்து செம்பாளூர் சமுதாய கிணறு பயனற்றுப் போனதால் செம்பாளூர் சிறுவிவசாயிகள் இறைவை பாசன கூட்டுறவு சங்கமும் கலைக்கப்பட்டுவிட்ட நிலையில் மீதமுள்ள நிலுவை தொகை ரூ.11,905/–ஐ யாரிடமும் பொறுப்பேற்று வசூல் செய்ய இயலாத நிலையில் மேற்படி தொகையினை தள்ளுபடி செய்ய அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணைக்கு, அரசு ஆணை (நிலை) எண்.519, நிதி (சம்பளங்கள்) துறை, நாள் 29.9.1997ன் படி நிதித்துறையின் இசைவு பெற தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (வேளாண்மை பொறியியல்) துறை, சென்னை–35.
முதன்மை கணக்காயர் (G&SSA/E&RSA/C&RSA/A&E/AAD) , சென்னை–18 (பெயரில்)
மாநில கணக்காயர் , சென்னை–18 (பெயரில்)
உறைவிடத் தணிக்கை அலுவலர், மாநில முதன்மைக் கணக்காயர் அலுவலகம், (சமூகத் தணிக்கைப் பிரிவு), சென்னை–9
சம்பள கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், சென்னை–9.
நிதி (வேளாண்மை ) துறை, சென்னை–9
பொது(சிறப்பு–அ/கமுக்கம்) துறை, சென்னை–9
வேளாண்மை (அ.ந.மு3 ) துறை, சென்னை–9 (2 நகல்கள்)
உதவி நிரலர், வேளாண்மைத் துறை, சென்னை–9
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

12/3/18

பிரிவு அலுவலர்